7. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, மீன் வளத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் வரலாற்றில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் இருக்கின்ற நேரத்திலேதான் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாட்டிலே கொண்டு வருவதற்கு அனைத்து விளையாட்டு அரங்குகளையும் உருவாக்கி ஒரு வரலாற்றைப் படைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

எட்டயபுரத்து பாரதியார் கண்ட கனவு, ஓடி விளையாடு பாப்பா – நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா" என்று பாரதி பாடியதைப்போல, எடப்பாடியிலே பிறந்து இன்றைக்கு இந்த மண்ணிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய கோடானுகோடி நன்றி மலர்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிப்படை கட்டமைப்பு வசதிகள் சரியான முறையில் இருந்தால்தான் மீனவர் நலன், மீன் வளம் மேம்பாடடையும் என்ற கருத்தினை மையமாக வைத்து, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், துறைமுகங்கள், தங்குதளங்கள், ஏலமிடும் கூடம் போன்ற பல்வேறு வசதிகளை எல்லாம் இன்றைக்கு அவர்கள் விதி 110–ன்கீழ் அறிவித்திருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பிலும், துறையின் சார்பிலும், மீனவ மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

அதோடு, நீண்ட நாள் கோரிக்கை, 2005 ஆம் ஆண்டுக் காலத்தில், அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட Information Commission – மாநில தகவல் ஆணையம். அந்த ஆணையத்திற்குச் சொந்தக் கட்டடம் கிடையாது. எனவே, இன்றைக்கு அந்தக் கனவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நனவாக்கியிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு என்னுடைய நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) என்ன? (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும், துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களும் மீனவ சமுதாய மக்களுக்கு ஏற்புடைய திட்டங்களை மிகச் சிறப்பாக, தாராளமாக நிதியைக் கொடுத்து, பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி வருகிறார்கள். கடந்த ஆண்டு, தரங்கம்பாடியிலே 120 கோடி ரூபாயிலேயும், வெள்ளப்பள்ளத்திலே 100 கோடி ரூபாயிலேயும், இந்த ஆண்டு, வேதாரண்யம், ஆற்காட்டுத்துறையிலே 120 கோடி ரூபாயில் ஒரு புதிய மீன்பிடி துறைமுகத்தை அமைப்பதற்கு ஆணையிட்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே வேளையில், நாகப்பட்டினத்திலே வெட்டாற்றில், பட்டினச்சேரி கிராமத்தில், ஒரு பக்கம் ஏற்கெனவே கல் போடப்பட்டு, மறு பக்கம் கல் போடப்படாமல் தடை செய்யப்பட்டிருந்தது. அதையும் தொடர்ந்து மண் மேடு இடுகிற அந்தக் குறையைத் தீர்ப்பதற்கு இந்த ஆண்டு 20 கோடி ரூபாய் நிதி அறிவித்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையின்

மூலமாக பல்வேறு அறிவிப்புகளைக் கொடுத்து, இன்றைக்கு தமிழகத்திலே மாண்புமிகு அம்மா அவர்கள் கிராமப்புற மக்களுக்கு என்னென்ன திட்டங்களைக் கொடுத்தார்களோ அந்தத் திட்டங்களை தன்னுடைய ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்து கொடுத்து, புதிய அறிவிப்புகளை இன்றைக்கு வெளியிட்டு, கால்நடை பராமரிப்புத் துறையிலே ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கியிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பிலும் என்னுடைய சார்பிலும் மகத்தான நன்றியை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தமிமுன் அன்சாரி, என்ன? உங்கள் கோரிக்கையை வலியுறுத்துகிறீர்களா அல்லது முதலமைச்சருக்கு நன்றி சொல்கிறீர்களா? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன் கீழ், என்னுடைய நாகப்பட்டினம் தொகுதியிலே அந்த மீனவ மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கைகளை ஏற்கும் விதத்திலே நாகூர், பட்டினச்சேரி, வெட்டாற்றில் தடுப்புக் கரை அமைத்துத் தரப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள். 'கஜா' புயல் வீசிய அந்த நேரத்தில் அங்கு வருகை தந்திருந்த நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும், அந்த மக்களுடைய உணர்வுகளை நேரில் கண்டார்கள். தொடர்ந்து இது சார்பாக எங்களுடைய மாவட்ட அமைச்சர் அண்ணன் திரு. ஓ.எஸ். மணியன் அவர்களும் வலியுறுத்தி வந்தார்கள். இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்டினச்சேரி வெட்டாற்றிலே தடுப்புக் கரை அமைக்கப்படும் என்று அறிவித்திருப்பதற்கு என் சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும், மீனவ மக்களின் சார்பிலும் நெஞ் சார்ந்த நன்றிகளைக் கூறி அமர்கிறேன். நன்றி.